# கீழக்கரை நகராட்சி

கீழக்கரை நகராட்சி அலுவலகத்தில் 2019 ஜுன் மாதத்திற்கான நகர்மன்ற சாதாரண கூட்டம் 26.06.2018–ந் தேதி மாலை 4.30 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், கீழக்கரை நகராட்சி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் :-

**பொருள் : 1**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.7616/2018/பி3 நாள்.06.06.2018–ன்படிநகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் 20.06.2018–ம்தேதி நடைபெற்ற 7வது மாநில உயர்மட்ட குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணஙக கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் இருந்து பிரித்து எடுக்கும் குப்பைகளை அந்தந்த வார்டு பகுதிகளிலே தரம் பிரித்து உரம் தயாரிக்கவும் இந்நகராட்சியில் ஏற்கனவே உள்ள புதிய உரக்கிடஙகில் பழைய உரக்கிடஙகில் உள்ள குப்பைகளை பிரித்து எடுத்து உரமாக்கி அகற்றுவதற்கும் மேலும் இந்நகர் பொதுமக்களின் நலன் கருதி வீடு வீடாகச் சென்று குப்பைகளைப் பிருத்து எடுத்து சேகரிக்க மின்கலன் மூலம் இயஙகும் வாகனஙகள் மற்றும் நான்கு சக்கர டிப்பர் ஆட்டோ வாகனஙகள் வாஙகுவதற்கு கீழ்கண்டவாறு பணிகள் தேர்வு செய்து விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது, நிர்வாக அனுமதி வேண்டியும், நிதி ஒதுக்கீடு கோரியும் கருத்துருவினை, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | **சிப்பம்–1 (Package-I)**<br>இந்நகராட்சி புதிய உரக்கிடஙகில் ஏற்கனவே உள்ள குப்பைகளை பிரித்து எடுத்து உரமாக்கி கழிவுகளை அகற்றுதல் **(Bio Mining Process)** | 58.00 |
| | இந்நகராட்சி பழைய உரக்கிடஙகில் ஏற்கனவே உள்ள குப்பைகளை பிரித்து எடுத்து உரமாக்கி கழிவுகளை அகற்றுதல் **(Bio Mining Process)** | 32.00 |
| 2 | **சிப்பம்–2 (Package-II)**<br>வார்டு எண்.2 இந்துக்கள் மயானம் பகுதியில் நுண் உரம் செயலாக்க மையஙகள் அமைக்கும் பணி.(Construction of Micro Composted Centre) | 50.00 |
| | வார்டு எண்.3 பழைய உரக்கிடஙகு பகுதியில் நுண் உரம் செயலாக்க மையஙகள் அமைக்கும் பணி. (Construction of Micro Composted Centre) | 50.00 |
| 3 | **சிப்பம்–3 (Package-III)**<br>இந்நகர் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று குப்பைகளைப் பிரித்து எடுத்து சேகரிக்க மின்கலன் மூலம் இயஙகும் வாகனம் 14 எண்ணம் வாஙகுதல்.(Purchase of Battery Operating Vehicle) | 28.50 |
| | இந்நகர் பகுதிகளில் வீடு வீடாகச் சென்று குப்பைகளைப் பிரித்து எடுத்து சேகரிக்க நான்கு சக்கர டிப்பர் ஆட்டோ 4 எண்ணம் வாஙகுதல். (Purchase of Four Wheeler Tipper Auto) | 25.50 |
| | **மொத்தம்** | **244.00** |

**(கோப்பு எண்.635/2018/இ1)**

**அலுவலக குறிப்பு**

1. பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்
2. மதிப்பீடு ரூ. 244.00 இலட்சத்தினை அரசு முழுமானியத்துடன் கூடிய நிர்வாக அனுமதி வழஙககோரி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.393</u>** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 2</u>**

கீழக்கரை இரண்டாம் நிலை நகராட்சி 21 வார்டுகள் கொண்டு உள்ளடக்கியதாகும். 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 38355 மக்கள் தொகை ஆகும். இந்நகர்ப் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் செயல்படுத்தும் பொருட்டு இந்நகர்ப்பகுதியில் சேகரமாகும் குப்பைகளை தற்போது தில்லையேந்தல் பஞ்சாயத்து பள்ளமோர்குளம் என்ற இடத்தில் அமைந்துள்ள நகராட்சி உரக்கிடஙகில் சுமார் 10 ஆண்டுகளாக கொட்டப்பட்டு வருகிறது. அதற்கு முன்னர் ஏற்கனவே இந்நகராட்சி வார்டு எண்.3–ல் அமைந்துள்ள பழைய உரக்கிடஙகில் கொட்டப்பட்டுள்ளது. இந்த குப்பைகளை பிரித்தெடுத்து உரமாக்கி கழிவுகளை அகற்றுவதற்கு Change Point Survey மூலம் குப்பைகளை அளவீடு செய்து தருமாறு, திண்டுக்கல், அண்ணா பல்கலைக் கழக தலைவர் அவர்களுக்கு 11.06.2018ம் தேதி இவ்வலுவலக கடிதத்தின் வாயிலாக கேட்டுக் கொள்ளப்பட்டது. அதன்படி மேற்கண்ட இரண்டு உரக்கிடஙகுகளில் குப்பைகளை Bio-Mining திட்டத்தில் பிரித்தெடுப்பதற்குரிய (WET) கூர்ந்தாய்வு செய்ததற்கான அறிக்கை கட்டணஙகள் வழஙகக் கோரி திண்டுக்கல், அண்ணா பல்கலைக் கழக துறைத் தலைவர் (Civil) அவர்களின் கேட்பு கடிதம் எண்.PMC.096/civil/CS/2018, நாள்.13.06.2018ன்படி வரப்பெற்றுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. | புதிய உரக்கிடஙகு 4.00 ஏக்கர் | – | ரூ. 40,000/– |
| 2. | பழைய உரக்கிடஙகு 1.50 ஏக்கர் | – | ரூ. 15,000/– |
| 3. | GST தொகை 18% | – | ரூ. 9,900/– |
| | **மொத்தம்** | | **ரூ. 64,900/–** |

மேற்காணும் விபரப்படியான தொகை ரூ.64,900/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.
(கோப்பு எண்.635/2018/இ1)

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.394</u>** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 3</u>**

கீழக்கரை நகராட்சி அலுவலக பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு, பொதுசுகாதார பிரிவு, நகரமைப்பு பிரிவு, பணியாளர்களுக்கான எழுதுபொருட்கள், படிவஙகள், பதிவேடுகள், அச்சிடும் தாள்கள் 2018–2019 ஆம் ஆண்டிற்கு அஙகீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனம் மூலம் வாஙகுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண். 510/சி2/2017)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அலுவலகப்பணிகளின் அவசர அவசியத்தின் காரணமாக அஙகீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனம் மூலம் பொருட்கள் வாஙக மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.395</u>** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 4</u>**

கீழக்கரை நகராட்சி அலுவலக பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு, பொதுசுகாதார பிரிவு, நகரமைப்பு பிரிவு பணிகளுக்கு தேவையான கணினி தொடர்பான டோனர்கள், கீபோர்டுகள், மவுஸ்கள் இதர சாமான்கள் 2018–2019 ஆம் ஆண்டிற்கு அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனம் மூலம் வாஙகுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண்.510/சி2/2017)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அலுவலகப்பணிகளின் அவசர அவசியத்தின் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனம் மூலம் பொருட்கள் வாஙக மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.396</u>** அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் : 5</u>**

கீழக்கரை நகராட்சி **TN65 S4101** ஈப்பு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்வதற்கு வீல் பேரிங, கிரீஸ், ஆயில் சீல், பிரேக் லைனிங, வீல் சிலிண்டர் அசெம்ப்ளி, பிரேக் ஆயில் 500 ML, ஸ்பிரிங கட் அன்ட் ரிமூவ் ரெக்கமெரிங ரிபிட்டிங, டிரம் பேசிங அன்ட் லேத் ஒர்க், 4 வீல் கிரீஸ் பேக்கப், 4 வீல் பிரேக் செக்கப் போன்றவற்றை செய்து தருமாறு இவ்வலுவலக ஈப்பு ஓட்டுநரால் அனுமதி கோரப்பட்டுள்ளது. அதன்படி மேற்காணும் ஈப்பு வாகனத்தை பழுது நீக்கம் செய்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.35,000/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து யளமேற்கொள்ளவும் மேற்படி பணிகளை நிர்வாக நலன் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று உடனடியாக பணிகள் மேற்கொள்ள பொறியாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது மன்ற அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண். 700 / 2018/ இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. உத்தேச செலவினம் ரூ.35,000/–ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

2. நிர்வாக நலன் கருதி உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.397</u>** அனுமதிக்கப்பட்டது.

**தனி அலுவலர் மற்றும்**
**ஆணையாளர் (பொ)**
**கீழக்கரை நகராட்சி**